**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**22 ஏப்ரல் 2016 / 14 ரஜப் 1437**

# <u>நற்காரியங்களைச் செய்வதில் பணிவைக் கடைப்பிடித்தல்</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ
وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الْأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பக்தியை) உறுதியாக்கிக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவோம் எனவும், அவன் தடுத்துள்ள அனைத்து விஷயங்களி லிருந்து தவிர்ந்து கொள்வோம் எனவும் நாம் எடுத்துள்ள தீர்மானத்தைப்

புதுப்பித்து, பசுமையாக்கிக் கொள்வோமாக! அவ்வாறு செய்வதன் மூலம் நமது நன்னடத்தைகள் சிறப்பாக அமையும். அல்லாஹ்வின் மீதான நமது நம்பிக்கையும் உறுதியாகும். இன்ஷாஅல்லாஹ்.

எனது அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கங்களில், நாம் அன்றாடம் ஜமாஅத்தாக நிறைவேற்றும் தொழுகைகள், தர்மம் செய்தல் போன்ற வணக்க வழிபாட்டுச் செயல்கள், "தவாதுஃ" எனப்படும் பணிவு மனப்பான்மை நம்மிடம் உறுதியாக அமைய எவ்வாறு உதவியாக இருக்கும் என விவாதித்தோம். மேலும், ஒருவர் அவ்வணக்க வழிபாடுகளை முறைப்படி தவறாமல் நிறைவேற்றி வந்தால், அல்லாஹ்வின் பணிவுள்ள அடியாராக அவர் ஆகுவதற்கும், அவ்வணக்க வழிபாடுகளை நேர்மையாக, அல்லாஹ்வுக்காக மட்டும் அவர் நிறைவேற்றுவதற்கும் அவருக்கு அவை பயிற்சியளிப்பதாகவும் இருக்கும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَمَآ أُمِرُوٓا۟ إِلَّا لِيَعْبُدُوا۟ ٱللَّهَ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ وَيُقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ
وَيُؤْتُوا۟ ٱلزَّكَوٰةَ ۚ وَذَٰلِكَ دِينُ ٱلْقَيِّمَةِ ٥

பொருள்: "அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும்; மேலும் தொழுகையை

அவர்கள் நிலைநாட்டவேண்டும்; மேலும் ஜகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்." (அத்தியாயம்: அல்-பய்யினா, வசனம்: 5)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

இமாம் அந்-நஸயீ (ரஹ்), இமாம் அல்-பைஹகீ (ரஹ்) ஆகிய இருவரும் தமது ஹதீதுக் கிரந்தங்களில் பதிவு செய்துள்ள ஒரு வரலாற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவ்வரலாறு நம்மனைவருக்கும் மிகச் சிறந்த பாடமாக அமையும் எனவும் கருதுகிறேன். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது தோழர்களாகிய ஸஹாபாக்களுடன் அமர்ந்திருந்த போது: "சொர்க்கவாசியாகிய ஒரு இளைஞர் இப்போது உங்கள் முன் தோன்றுவார்" என்று ரசூலுல்லாஹி(ஸல்) கூறினார்கள். இரண்டாவது மற்றும் மூன்றாவது நாளிலும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் அவ்வாறே கூறினார்கள். இதன் மூலம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது தோழர்களின் சிந்தனையைக் கவர முற்பட்டார்கள். ஒவ்வொரு நாளும் ரசூலுல்லாஹி(ஸல்) அவ்வாறு கூறும் போது, ஒரு இளைஞர் தோன்றினார். அவர் பார்ப்பதற்கு மிகவும் சாதாரண நபராகவே தென்பட்டார்.

மூன்றாவது நாள், அப்துல்லாஹிப்னு அம்ருப்னு அல்-ஆஸ் (ரலி) எனும் நபித்தோழர் தனது ஆர்வத்தைக் கட்டுப்படுத்த இயலாத நிலையில், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் சொர்க்கத்தைக் கொண்டு வாக்களிக்கப்பட்ட அந்த இளைஞர், எதன் காரணமாக அவ்வாறு

வாக்களிக்கப்பட்டார் என்பதை ஆராய முற்பட்டார். எனவே அந்த இளைஞரை தனியாகச் சந்தித்து: நான் உமது வீட்டில் உம்முடன் சில நாட்கள் தங்குவதற்கு விரும்புகிறேன்; எனக்கு அனுமதி தாருங்கள் எனக் கேட்டார். அவரும் அதற்கு அனுமதியளித்தார்.

அவரது வீட்டில் மூன்று இரவுகளைக் கழிந்த பின்பு கூட, ஏன் அந்த இளைஞர் சொர்க்கத்தைக் கொண்டு வாக்களிக்கப்பட்டார் என்பதை அப்துல்லாஹிப்னு அம்ருப்னு அல்-ஆஸ் (ரலி) அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம், அந்த இளைஞர் அசாதாரணமான நற்காரியம் எதையும் செய்ததாக அவர் காணவில்லை. இரவில் "தஹஜ்ஜத்" தொழுததையோ அல்லது பகல் பொழுதில் "திக்ரு" (தியாணம்) செய்ததையோ அவர் காணவில்லை. எனவே, மூன்றாவது நாள், அப்துல்லாஹிப்னு அம்ருப்னு அல்-ஆஸ் (ரலி) அவர்கள் அந்த இளைஞரிடம்: "ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் நீங்கள் சொர்க்கவாசி எனக் கூறப்பட்டீர்கள்; அது ஏன் எனத் தெரிந்து கொள்ளவே உங்களிடம் மூன்று நாட்கள் தங்கினேன்" என்று கூறினார்கள். அப்போது அந்த இளைஞர்: "நான் எவற்றைச் செய்வதாக நீர் கண்டீரோ அவற்றைத் தவிர வேறு எவ்வித நற்காரியத்தையும் நான் செய்வதில்லை" என்று பதில் கூறினார். அதைக் கேட்டு ஏமாற்றம் அடைந்த நிலையில் அப்துல்லாஹிப்னு அம்ருப்னு அல்-ஆஸ் (ரலி) அவர்கள் அவரது வீட்டை விட்டு வெளியேறினார்கள். அப்போது அந்த இளைஞர் அப்துல்லாஹிப்னு அம்ருப்னு அல்-ஆஸ் (ரலி) அவர்களை மீண்டும் அழைத்து: "நான் எவற்றைச் செய்வதாக நீர் கண்டீரோ அவற்றைத் தவிர வேறு எவ்வித நற்காரியத்தையும் நான் செய்வதில்லை; எனினும், நான் யாரையும் ஏமாற்றுவதில்லை; அல்லாஹ் மற்றவர்களுக்கு அருளிய

அருட்கொடைகளைக் கொண்டு நான் ”ஹசத்” (பொறாமை) கொள்வதுமில்லை” என்று கூறினார்.

அதைக் கேட்ட அப்துல்லாஹிப்னு அம்ருப்னு அல்-ஆஸ் (ரலி) அவர்கள் : ”ஆம்! இந்நற்பண்புகளை நீர் உம்மில் வெற்றிகரமாக ஏற்படுத்திக் கொள்ளும் ஆற்றலைப் பெற்று விட்டீர்! (அதன் காரணமாகவே நீர் சொர்க்கவாசி எனச் சுபச்செய்தி கூறப்பட்டுள்ளீர்) நாங்கள் அவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளும் ஆற்றலை இன்னும் பெறாதவர்களாக உள்ளோம்” என்று உடனடியாகக் கூறினார்கள்.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட சம்பவம், நாம் நிறைவேற்றும் நற்காரியங்களில் பணிவு காணப்படுவதன் அவசியத்தைச் சுட்டி காட்டுகிறது. ஒருவர் சாதாரண நபராகத் தென்படலாம்; ஆனால் அவர் செய்யும் நற்காரியத்தை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா தான் அறிவான். ஒருவரிடம் காணப்படும் வெளிப்படையான சில விசயங்கள் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துபவையாக இருக்கலாம். ஆனால், அவரில் மறைவாக உள்ள விஷயங்களை, அனைத்தையும் அறிந்த, பரிபூரணமான அறிவாற்றல் மிக்க அல்லாஹ் தான் அறிவான். எனவே, எவற்றை நாம் பார்க்கின்றோமோ அவற்றை வைத்து நாம் தீர்மானிப்பது கூடாது. எனினும், நாம் அவர்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் அல்லாஹ்வின் திருப்பொருத் தத்தை (ரிளா) நாடி துஆச் செய்யலாம்.

மேற்கண்ட வரலாற்றில் கூறப்பட்டுள்ள அந்த இளைஞரிடம் காணப்பட்ட மற்ற நற்பண்புகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர் சொர்க்கவாசி எனச் சுபச் செய்தி கூறப்பட்ட போதும் கூட, தான் எவ்வித விஷேசமான நற்காரியத்தையும் செய்யவில்லை எனப் பணிவுடன் அவர் பதிலளிக்கின்றார். இது தான் பணிவும் நேர்மையும் மிக்க ஒரு மனிதனின் உண்மையான இயற்கைத் தன்மையாகும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

நற்காரியங்களைச் செய்வதில் பணிவுடன் காணப்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டி காட்டும் வகையில் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறிய மற்றொரு ஹதீதில் நாம் கவனம் செலுத்துவோமாக! ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

நிச்சயமாக, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. உங்களில் ஒருவர் சொர்க்கவாசிகளின் செயல்களைத் தொடர்ந்து செய்து வருகிறார். அவருக்கும் சொர்க்கத்துக்கும் மத்தியிலான தொலைதூரம் இன்னும் ஒரு முழம் தான் இருக்கின்றது. அந்நிலையில், அல்லாஹ் அவருக்கு எதனைத் தலைவிதியாக ஏற்படுத்தியுள்ளானோ அது அவரை முந்தி விடுகிறது. அதன் காரணமாக, நரகவாசிகள் செய்யும் செயல்களைச் செய்ய அவர் முற்படுகின்றார். இறுதியில் அவர் நரகத்தில் புகுந்து விடுகின்றார். உங்களில் ஒருவர் தொடர்ந்து நரகவாசிகளின் செயல்களைச் செய்து வருகின்றார்; அவருக்கும் நரகத்துக்கும் மத்தியிலான தொலைதூரம் இன்னும் ஒரு முழம் தான் இருக்கின்றது. அந்நிலையில், அல்லாஹ் அவருக்கு எதனைத் தலைவிதியாக ஏற்படுத்தியுள்ளானோ அது அவரை

முந்தி விடுகிறது. அதன் காரணமாக, சொர்க்கவாசிகள் செய்யும் செயல்களைச் செய்ய அவர் முற்படுகின்றார். இறுதியில் அவர் சொர்க்கத்தில் புகுந்து விடுகின்றார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

ஜமாஅத்தார்களே!

ஒருவர், நற்காரியங்களை, வணக்க வழிபாட்டுச் செயல்களை எவ்வளவு தான் அதிகம் செய்திருந்த போதிலும் ஏதாவதொரு நேரத்தில் பாவத்தைப் புரியும் சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டு விடலாம். பாவம் புரியும் நிலையிலேயே அவருக்கு மரணம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. ”நவூதுபில்லாஹ்!” (அதிலிருந்து அல்லாஹ்விடம் நாம் பாதுகாவல் தேடுகிறோம்).

எனவே, பாவத்திலிருந்து தப்பிப்பதற்கான உத்திரவாதம் நமக்கே இல்லாத நிலையில், மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதுவதற்கோ, அவர்கள் செய்யும் தவறுகளை வைத்து தீர்ப்பளிக்கவோ நமக்கு எவ்வாறு உரிமை உள்ளது? அவர்களின் நற்காரியங்களுக்குப் பலன் கிடைக்காது; அவை மிகவும் தரம் குறைந்தவை எனக் கூறுவதற்கு நமக்கு எவ்வாறு உரிமையுள்ளது? அவர்கள் தம்மைத் திருத்திக் கொண்டு நல்ல மக்களாக ஆகுவதற்கும், நம்மை விட அதிகமாக வணக்க வழிபாட்டுச் செயல்களைச் செய்யும் சந்தர்ப்பங்களைப் பெறுவதற்கும் வாய்ப்புள்ளதல்லவா?

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா விஷயத்தில் நாம் நல்லதையே நினைக்க வேண்டும். அவன் தனது அடியார்களின் நற்காரியங்களை வீணாக்கமாட்டான் என நாம் நம்ப வேண்டும். அதே சமயம், ஒவ்வொரு

"முஃமின்" (ஓரிறை நம்பிக்கையாளர்) தொடர்ந்து அல்லாஹ்வின் அருளையும் உதவியையும் தேடிக் கொண்டே இருக்க வேண்டும். காரணம், ஒவ்வொரு விஷயத்தின் இறுதி முடிவு எப்படி இருக்கும் என்பதை அனைத்தையும் அறிந்த அல்லாஹ்வே நன்கறிவான்.

நமது குடும்பத்தார்கள் அனைவருக்கும் பணிவையும், நேர்மையான உள்ளங்களையும் வழங்குமாறு அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்கிறோம். நாம் புரியும் அனைத்து நற்காரியங்களை அல்லாஹ்வுக்காவே செய்வதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! இன்ஷாஅல்லாஹ். ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்காக கடின முயற்சி செய்பவர்களில் நின்றும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.